நன்றி - நூலகத்திட்டம்

# சரிநிகர்

இதழ்-1 ஜூன் 1990 விலை: ரூ: 5

# மீண்டும் போரா?

வவுனியாவில் இம் மாதம் 7ந் திகதி நடைபெற்ற விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையிலான மோதல், வடக்குக் கிழக்கில் மீண்டுமொரு யுத்த அபாயம் தோன்றியுள்ளதா என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் புலிகளின் காவல் அரணை உடைத்துக் கொண்டு முல்லைத்தீவை நோக்கி முன்னேறிய இராணுவ வாகனங்களை தடுத்த போது புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இம்மோதல் ஏற்பட்டது. இம்மோதல் இலங்கை இராணுவத்தினரிடையே இன்னமும் நிலவும் மேலாதிக்கப் போக்கையும், யுத்த நோக்கையும் உணர்த்துவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் கடந்த ஒருவருடமாக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைக்கு முன்நிபந்தனையாக விதிக்கப்பட்டிருந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை இராணுவத்தினர் முதல் தடவையாக இச்சம்பவத்தின் போது மீறி இருக்கிறார்கள். சமீபகாலமாக இராணுவ முகாம்களைப் பலப்படுத்துவதும், பெருமளவில் ஆயுதங்களைக் குவிப்பதும், சீ.பிளேன் மற்றும் பொம்பர் விமானங்கள் உலாவிவருவதும் குறித்து விடுதலைப்புலிகள் தெரிவித்த ஆட்சேபத்தின்பின் யாழ்ப்பாணம் சென்ற அமைச்சர் ஹமீத் இராணுவ தளபதிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பரஸ்பர சந்தேகத்தை தவிர்க்க வாராந்த சந்திப்புக்கு ஒழுங்கு செய்திருந்தார், இதன் பிரகாரம் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய அனைத்து இடங்களிலும் இது தொடர்பாக விடுதலைப்புலிகள் - இலங்கை இராணுவத்தினர் சந்திப்புகள் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய நிலமைகளின் பின்னும், முன்னறிவிப்பில்லாமல் படைகள் போவதில்லை என புலிகளுக்களித்த வாக்குறுதியை மீறி இலங்கை இராணுவம் முல்லைத்தீவு செல்ல முயன்றதும், யுத்தத்திற்கு இறங்கியதும் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாயுள்ளது.


அரசு மேல் மட்டங்களிலும் இராணுவ மேல் மட்டங்களிலும் சமரச முயற்சி தொடர்கையை சுட்டிக்காட்டி இது கீழ்மட்ட இராணுவ வீரர்களின் தவறுகள் என நியாயம் கூறப்படுகிறது.

எப்படி இருப்பினும், இத்தகைய நடவடிக்கைகள் இலங்கை அரசின் கடந்தகால இனவெறி நடைமுறையின் தவிர்க்க முடியாத அம்சங்களாக இன்னமும் நிலவுவதை தெளிவாக்குகின்றன.

இன்னமும் இராணுவம் சிங்கள இராணுவமாகவும், அதன் நடவடிக்கைகள் ஆக்கிரமிப்பு மற்றும் அட்டூழியமாகவே தான் தமிழ் மக்கள் மத்தியில் இடம் பெற்றுள்ளதாக இது காட்டுகிறது.

எப்படியோ, இவை எல்லாவற்றிற்கும் பொறுப்பேற்க வேண்டியது இலங்கை அரசே என்பதுதான் எமது அபிப்பிராயமாகும்.

சரிநிகர் இதழ் அச்சிலிருக்கும் போதே புலிகள்- அரசபடை மோதல் கல்முனையில் உக்கிரமாக நிகழ்வதாகச் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன.
பின்னைய செய்திகளுக்கு பார்க்க: பக் 8



சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே...
-பாரதி-

## முதல்காலடி

வணக்கம்.

ஒரு 'அதிரடித் தாக்குதல்' போல எதிர்பாராது திடீரென்று உங்களைச் சந்திக்கிறோம். (பாருங்கள் : மொழியே எவ்வளவு தூரம் ராணுவ மயப்பட்டுவிட்டது என்று!)

'சரிநிகர்' என்ற எங்களுடைய பத்திரிகையே நாம் சந்தித்துக் கொண்ட சந்திக்கப் போகிற தளம்.

நீண்ட காலமாகவே இனங்களுக்கிடையே நீடிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் இத்தகைய பத்திரிகையொன்று தமிழில் கொண்டுவர வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தும் இன்றுதான் சாத்தியமாகி உள்ளது.

இலங்கை பல்வேறு இனக் குழுமங்களையும் பல்வேறு மதங்களையும் கொண்ட ஒரு நாடு என்பதும் இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு எவ்வாறு இந்த இனக் குழுமங்களிடையேயும் மதங்களிடையேயும் சமத்துவம் பேணப்படுகிறது ; பேணப்படப் போகிறது என்பதிலேயே தங்கியுள்ளதென்பதும் ஒரு தவிர்க்க முடியாத வரலாற்று நியாயம் என்று கருதுகிறோம். இன்று வரையும் இனக் குழுமங்களுக்கிடையே நிலவி வருகிற அசமத்துவம் என்று முற்றாக நீக்கப்படுகிறதோ அன்றுதான் இலங்கையின் வரலாறு முன்நோக்கிய முதலாவது அடியை எடுத்து வைக்க முடியும்.

சரிநிகர் — அதனுடைய பெயர் தெளிவுபடுத்துகிற மாதிரியே இலங்கையின் சகல இனக் குழுமங்களுக்கிடையேயும் அசமத்துவத்தை ஒழிக்க முன் வருகிறது. எங்கெங்கு அசமத்துவம் நிலவுகிறதோ அங்கங்கு எங்களுடைய 'தாக்குதல்கள்' இடம் பெறும்.

நீதியும், மனித உரிமைகளும், உண்மையும் பத்திரிகைச் சுதந்திரமும் வாழும், வாழ்விக்கும் தேசமே எங்களுடைய இலட்சியம். இந்த இலட்சியம் யதார்த்த நிலைக்குக் கொண்டு வரப்படவேண்டுமானால், இந்த நாட்டின் முக்கியமான சிறுபான்மை மக்களான வடக்குக் கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகியோருடைய தனித்துவம் வாய்ந்த பிரச்சனைகளும், அவர்களுடைய தனித்துவமான இனக்குழும இயல்புகளும் கவனத்திலெடுக்கப்பட்டு ஒரு பரந்த புரிந்துணர்வு அடிப்படையில் தீர்வு முயற்சிகள் செய்யப்பட வேண்டும்.

சரிநிகர் — அனைத்துச் சிறுபான்மை மக்களதும் 'தேசிய'த்துக்கு உத்தரவாதம் அளிக்கும். அதே சமயம் இம் மக்களிடையே நல்லெண்ணமும் சிறந்த உறவுகளும் நிலவத் தன்னாலான பணியைப் புரியும். மேலாதிக்க வாதமும், அச்சுறுத்தலும் எங்கிருந்து வந்தாலும் எதிர்க்கப்படவேண்டியனவே என்னும் நிலைப்பாட்டிலிருந்து சரிநிகர் பிறழாது.

'நாலுவார்த்தை பேச, எழுத' எவர்க்கும் இருக்கும் உரிமையை அங்கீகரிக்கும் நாம் எங்களுக்கிருக்கும் அந்த உரிமையை எவர்க்காகவும் விட்டுக் கொடுக்கவும் தயாரில்லை.

எங்களுடைய நீண்ட, கடினமான, ஆபத்துக்கள் நிறைந்த பயணத்தில் துணைக்கரம் சேர்க்க வாருங்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# மெல்லத் தமிழினி..



இலங்கைப் புகையிரத சேவைக்குப் பெருமளவு வருமானத்தைத் தருகின்றவை கொழும்பு-காங்கேசன்துறை, கொழும்பு-மட்டக்களப்பு சேவைகளே என்பது எல்லோரும் அறிந்த விசயம்.

இரவு ஆறரைக்குப் புறப்படுகிற கே.கே.எஸ். மெயில் வண்டிக்கு ஐந்தரை மணிக்கெல்லாம் பயணிகள் வந்து குவிந்து விடுகிறார்கள். வண்டி வந்து நிற்கமுதலே ஒருவரை ஒருவர் முண்டியடித்துக் கொண்டு 'கோணர்' சீற்றுக்காக இடிபட்டு ஏற முயற்சிப்பதில் பலர் விழுந்து காயப்படுவது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது.

காங்கேசன்துறையில் ரெயில் புறப்படும் நேரம் ஆறரை தானென்றாலும் நாலுமணிக்கெல்லாம் எல்லாக் கோணர் சீற்றுகளும் நிறைந்து விடுகின்றன. சீற்றுக்களை முன்கூட்டியே பதிவு செய்வது என்பது சாதாரணமாக சாத்தியமாவதில்லை. பத்து நாட்களுக்கு முன்னே உறங்கலிருக்கை ஆசனங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு விடுகின்றன. வண்டியில் வழிய வழிய ஆட்களை ஆடுமாடுகள் போல ஏற்றி இறக்கும் சேவையை மிகவும் லாபகரமாக செய்து கொண்டிருக்கிறது இலங்கைப் புகையிரத சேவைப் பகுதி.

இந்த கே. கே. எஸ், மட்டக்களப்பு ரெயில்களின் மூன்றாம் வகுப்பு இருக்கைகளோ, வெள்ளைக்காரன் காலத்தில் அடிமைகளாக மதிக்கப்பட்ட இலங்கையரையும், இந்தியத் தோட்டங்களுக்கும் மற்றும் துறைமுகங்களுக்கும் கூலிகளையும் ஏற்றி இறக்க செய்யப்பட்ட ஆசனங்கள் இற்றைவரை அப்படியே எந்த மாற்றமும் இல்லாமல் இருக்கின்றன.

இருக்கைகளில் ஒருவரால் அதிகபட்சம் ஒருமணி நேரத்திற்கு மேல் தொடர்ச்சியாக இருக்க முடியாது. உயரம் குறைவானதும் அகலம் குறைவானதுமான இவை செங்குத்தான சாய்மனையை கொண்டிருப்பதால் மதவில் இருப்பது போலத் தான் இருக்க வேண்டி இருக்கிறது. மதவிலாவது கால்களை தொங்கவிடலாம். இதிலே அதுகூடச் சாத்தியமில்லை.

'வெள்ளைக்காரனுக்குத்தான் நாங்கள் அடிமைகள் என்றால் இப்பவுமா?' என அங்கலாய்த்தார் ஒரு பயணி.

'நாங்கள் தமிழர் தானே, எங்களை இலங்கை அரசாங்கம் இன்னும் அடிமைகளாகத் தான் நினைக்கிறதாக்கும். கண்டி ரெயிலைப் பார்த்தால் உண்மை விளங்கும்' என்று பதிலளித்தார் இன்னொரு பயணி. மட்டக்களப்பு, காங்கேசன்துறை ரெயிலுக்கும், இலங்கை அரசின் இனக் கொள்கைக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா என யாராவது தெரிவிப்பார்களா?

ஒருமுறை எனது சகோதரரின் கடவுச்சீட்டுக்கான விண்ணப்பப்படிவத்தை கையளிப்பதற்காக 'பாஸ்போட் ஒப்பீ'சுக்கு சென்றிருந்தேன்.

விண்ணப்பப்படிவத்தை பார்வையிட்ட லிகிதர் 'பிரஜை' என்ற இடத்தில் நான் எழுதியிருந்த 'SRI LANKAN' என்ற சொல்லை 'SRI LANKAN TAMIL' என எழுதித் தரும்படி கேட்டார். நான் புரியாமல் விழிக்கவே, அவரே எழுதிவிட்டு விண்ணப்பத்தை எடுத்து வைத்துக் கொண்டார்.

எனது சிங்கள நண்பர் ஒருவரிடம் இதைப்பற்றிச் சொல்லி 'நீங்கள் எப்படி எழுதுவீர்கள்' எனக் கேட்டேன். 'SRI LANKAN' என்றுதான் அவர் எழுதுவாராம். அப்படியானால் 'SRI LANKAN' என்பது சிங்கள மக்கள் மட்டுமா? தமிழ் மக்கள் அப்படியல்லவா? இதுபற்றி யாரிடமாவது கேட்க வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தேன்.

'இந்தியத் தமிழரும் இருப்பதால்' எனப் பதில் தந்தார் எனது இன்னுமொரு நண்பர். 'அதனால் அப்படி எழுதச் சொல்கிறார்கள்' என்பது அவரது அபிப்பிராயம்.



'இப்போதுதான் இந்தியத் தமிழர் இங்கு இல்லையே? எல்லோருக்கும் தான் இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கியாயிற்றே' என்று நான் கேட்டேன்.

'அது பேப்பர் நியூஸ். ஆனால் நடைமுறையில் அது இன்னமும் இல்லை' என்று அவர் தெரிவித்தார். இவர் ஒரு 'சிவில் சேவிஸ்' உத்தியோகத்தர்.

'ஏன்' என்று கேட்டேன்.

இன்னும் அது தொடர்பான 'அலுவலக உத்தரவுக் கடிதங்கள் எங்கும் அனுப்பப்பட்டதாக தெரியவில்லை' என்றார்.

'சரிதான் இப்பத்தான் விளங்குது, புலிகள் ஏன் ஆயுதங்களை கொடுக்க மாட்டேனென்கிறார்கள் என்று' என்றேன் நான்.

'உஷ்... மெல்லமாகப் பேசு அது அரசியல்'

'என்றால்...?'

'உதெல்லாம் எங்கட விசயம் இல்லை. பெரிய இடத்து விசயம்

எனக்குப் புரியவில்லை. யாராவது பெரிய இடத்து கனவான்கள் இதற்குப் பதில் தருவார்களா?




'டெலிவிசன் செற்' வாங்குவது ஒருவகை 'டாம்பீகமான' செயல் என்ற அபிப்பிராயம் எனக்கு நீண்ட காலமாக இருந்தது. ஆனால், யாழ்ப்பாணத்தில் இப்போது வீட்டுக்கு வீடு அது வந்துவிட்டபின் அதிலே ஏதாவது பிரயோசனம் உண்டு தானா என கடந்த ஒருவருட காலமாக அவதானித்து வந்திருக்கிறேன்.

நிறைய பிரயோசனமான அம்சங்களை அதன் மூலம் மக்களுக்கு கொடுக்க முடியும் என்பது புரிந்தபோது, ரூபவாஹினி தமிழ் நிகழ்ச்சிகளையிட்டு மிகவும் கவலையாக இருந்தது.

ரூபவாஹினிக்காரர்கள் என்னதான் ஆயிரம் நியாயங்களைச் சொன்ன போதிலும், தமிழ் நிகழ்ச்சிகளையும் சிங்கள நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிஞ்சுவது வயிற்றெரிச்சல் தான்.

சிங்கள நாடகங்கள் எவ்வளவு அருமையாக தத்ரூபமாக தயாரிக்கப்படுகின்றன. அவற்றுடன் ஒப்பிடக்கூடியதாக கடந்த ஒரு வருடத்தில் ஒரு நாடகம்கூட வெளிவரவில்லை.

ஏன் சிலவேளைகளில் தமிழ் நாடகங்களை பார்க்கும் போது டீ. வி.க்கு முன்னால் இருக்க வெட்கமாகக்கூட இருக்கிறது. டெலிவிசன் என்ற தொடர்பு சாதனத்தின் தன்மையை புரிந்துக் கொள்ளாததா அல்லது அக்கறையின்மையா அல்லது இங்கேயும் தமிழுக்குப் புறக்கணிப்பா என்பதை யாராவது தெரிவிப்பார்களா?


## நிகழ்-1

ஒவ்வொரு நாளும்
இரவு கவிகையில்
''அவர்கள்'' வருவர்

ஒழுங்கை முகப்பில்
நாய்கள் குரைக்கையில்
அவர்கள் வருகையை தெரிந்து கொள்ளுவோம்

விளக்கை அணைத்து
வாசலைப் பார்த்து
மௌனமாயிருப்போம்
வேலியோரத்தில்
நிற்பதும், நடப்பதுமாய்
அவர்களின் பவனி தொடரும்.

புரியாத மொழியில்
பேசிய போதும்
அவர்கள் கேட்பது நமக்குப் புரியும்.
பெண்;
நகை;
புலி;



ஒலியடங்கிய சற்று நேரத்தில்
எங்காவது
வீரிட்ட அழுகையோ
வேட்டொலியோ
கேட்டபடி
தூங்கிப் போவோம்
விடியும் வரையில்
நிம்மதி மறந்து
உறங்குவதே போல்
வாழவும் தெரிந்து—
வைத்திருக்கின்றோம்.

நன்றி - நூலகத்திட்டம்





# "—நாங்கள் இந்தியர்கள் அல்லர்—"

கடந்த பல வாரங்களாக மலையகப் பகுதிகளை நெருக்கடி நிலைக்குள் ஆழ்த்தி விட்டிருந்த நிகழ்ச்சி மலையக மக்கள் முன்னணியின் (ம.ம.மு.) தலைவர் பி. சந்திரசேகரனின் திடீர் கைது ஆகும். கைதுக்கான உத்தியோக பூர்வமான காரணங்கள் எதுவும் இதுவரை தெரியவில்லையாயினும், பலவகையான ஊகங்களும் அபிப்பிராயங்களும் முன்வைக்கப்படுகின்றன, இந்தியக் கடவுச் சீட்டுப் பெற்ற மலையக மக்களை இந்தியா அனுப்புவது குறித்து அரசின் தீவிர கவனம் ஈர்க்கப்பட்டதும், சந்திரசேகரனின் இது பற்றிய நிலைப்பாடும் (''கட்டாயக் கப்பலேற்றுதல் ஒரு போதும் இல்லை!'') அரசைத் தூண்டி விட்டன என்பது ஒரு கருத்து, இன்னுமொரு அபிப்பிராயம், கடந்த மேதின விழாவுக்கு இடம் ஒதுக்குவது தொடர்பாக மலையக மக்கள் முன்னணிக்குப் பாரபட்சம் காட்டப்பட்டதிலிருந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து உருவாகியுள்ளது.

தலவாக்கொல்லை நகரில் மேதின விழாவை நடாத்துவதற்குப் பொலிஸ் அனுமதி கோர, பங்குனி இருபத்திரண்டாம் திகதியே ம.ம.மு. விண்ணப்பித்திருந்தும், அனுமதி வழங்கப்படவில்லை. 'போக்குவரத்து நெரிசல்' ஏற்படும் என்று காரணம் தரப்பட்டது. ஆச்சரியம் என்னவென்றால் ம.ம.மு. விண்ணப்பித்து, சரியாக ஒரு வாரத்திற்குப் பிற்பாடு தலவாக்கொல்லையில் மேதின விழா நடாத்த அனுமதி கோரி விண்ணப்பித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு உடனடியாகவே அனுமதி வழங்கப்பட்டு விட்டது.

தலவாக்கொல்லை நகரில் மேதின விழா நடாத்த முடியாமல் போனதால் ம.ம.மு, ஹொலிவூட், சென்ட். கிளேயர்ஸ், ட்றெயிற்றன் போன்ற தோட்டங்களில் அவ்வத் தோட்டங்களிலேயே மேதின விழாவைக் கொண்டாடுவதாக ம.ம.மு. தீர்மானித்தது சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன. தலவாக்கொல்லைப் பொலிசார் 30ம் திகதி இரவே சுவரொட்டிகளையும் சோடனைகளையும் பலவந்தமாக அகற்றி விட்டதாகவும் தலவாக்கொல்லை நகரில் இ.தொ.கா.வைத் தவிர வேறெவரும் சுவரொட்டிகளோ சோடனைகளோ கொண்வா இயலாதெனக் கட்டளையிட்டதாகவும் தெரிய வருகிறது.

இப் பின்னணியில் இ.தொ.கா. - ம.ம.மு. ஆதரவாளர்களிடையே சிறு சிறு கைகலப்பும் ஏற்பட்டது. இ.தொ.கா. முக்கியத்தர் ஒருவர் ஈழப் புரட்சி அமைப்பு (EROS) மேதின விழாக் கூட்டம் பற்றி ஒலிபரப்பிக் கொண்டு சென்ற வாகனத்தின் முன் கண்ணாடியை அடித்து நொருக்கினார் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

ம.ம.மு.யின் அண்மைக் கால எழுச்சியும், பாரம்பரியமான இ.தொ.கா பிரதேசங்களில் மெல்ல மெல்ல இளைஞர் சக்தி புதிய புதிய தலைமைகளுக்குப் பின்னால் சேருவதையும் பொறுக்க முடியாத இ.தொ.கா. சந்திரசேகரனின் கைதுக்குப் பின்னால் உள்ளது என்ற அபிப்பிராயமும் மலையகத்தில் பரவலாக இருக்கிறது.

உண்மை நிலை எப்படி இருப்பினும், சில அடிப்படையான விஷயங்கள் சந்திரசேகரன் கைது நிகழ்ச்சியை ஒட்டி மேலெழுந்துள்ளன. முதலாவது, கணிசமான அளவு தோட்டத் தொழிலாளர்கள் குறிப்பாக இளைஞர்கள் - பாரம்பரியத் தொழிற்சங்கத் தலைமைகளில் அதிருப்தியுற்றிருக்கிறார்கள் என்பது, இரண்டாவது, வடக்குக் கிழக்கில் ஆட்சி நடாத்தும் விடுதலைப் புலிகள் மலையக மக்கள் பிரச்சனையை மாற்றார் பிரச்சனை என்று தள்ளி விடாமல் 'எச்சரிக்கைச் சமிக்ஞைகளை' அரசுக்குக் காட்டியுள்ளமை. (குறிப்பாக ஹர்த்தால், மற்றும் அவர்களுடைய அண்மைக் கால அறிக்கைகள்); மூன்றாவது குடாநாட்டுப் பத்திரிகைகளான ஈழநாடு, ஈழநாதம், முரசொலி, உதயன் ஆகியன சந்திரசேகரன் கைது மற்றும் அது தொடர்பான விஷயங்களுக்குக் கொடுத்த முக்கியத்துவம், முன்னுரிமை மற்றும் எடுத்த நிலைப்பாடு (கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைகள் இவ்விஷயத்தை முக்கியத்துவமற்றதாகக் கொண்டவா அல்லது வேறேதாவது காரணங்களா என்று தெரியவில்லை!)

இறுதியானதும் முக்கியமானதுமான விஷயம் இந்தியக் கடவுச் சீட்டுப் பெற்றுள்ள 175,000 மலையக மக்களைக் 'கட்டாயக் கப்பலேற்றுவது' பற்றியது. இந்த ஒன்றே முக்கால் லட்சம் மக்களில் (உண்மையில் கடவுச்சீட்டுப் பெற்றவர்களின் தொகை 84,141 மீதி இவர்களுடைய இயற்கை வாரிசு) மிகப்பெரும்பான்மையோர் இலங்கையின் இனத்துவ நெருக்கடிக் கெடுபிடிகளால் 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்ற மாயையில் இந்தியக் கடவுச் சீட்டைப் பெற்றோர் ஆவர். ஆனால் இன்றைய நிலையில் இவர்களில் எவ்வளவு பேர் இந்தியா சென்று கொடைக்கானலிலும் நீலகிரிக் குன்றுகளிலும் இன்னும் ஆந்திர கர்நாடகத் தொலைபுலங்களிலும் கொத்தடிமைகளாக வாழ விரும்புவர் என்பது மிகப் பெரும் கேள்வி, ஆனால் இக் கேள்விக்கு விடை ஒன்றே ஒன்று தான்:

> இப்போது இலங்கையில்
> இந்தியர் என்று
> எந்த மலையக மக்களும்
> இல்லை!

''ஏன் என்று கேட்கவும் நாங்கள் யார்? உழைக்கவும் சாகவுமே பிறந்தவர்கள் நாம்'' என்று அவர்கள் எண்ணியிருந்த காலங்களை இனிக் கல்லறைக்குள் தான் தேட வேண்டும்.

—நமது மலையக நிருபர்—

## காதரின் பேட்டி

### பி. ஏ. காதர்

கேள்வி: இந்திய கடவுச் சீட்டு பெற்றவர்களை இலங்கை அரசு வெளியேற்ற முயலும் போது அதனை உங்கள் கட்சி எதிர்ப்பதேன்?

பதில்: மனிதாபிமானம் அற்ற இச் செயலை நாம் மாத்திரம் அல்ல, மலையகத்தில் உள்ள சகல அமைப்புகளும், வடக்கு கிழக்கு சகல அமைப்புகளும், தெற்கில் உள்ள சகல முற்போக்கு அமைப்புகளும் எதிர்க்கின்றன. நாம் இதனை எதிர்ப்பதற்கு வெறும் மனிதாபிமானம் மாத்திரம் காரணம் அல்ல. அது எமது மக்களின் அடிப்படை உரிமை சம்பந்தமான பிரச்சனை. இந்த நாட்டில் 150 வருடங்களாக ஐந்து தலைமுறைக்கு மேல் வாழ்ந்து வரும் ஒரு மக்கள் கூட்டம் அதன் விருப்பத்திற்கு மாறாக வெளியேற்றப்படுவது ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும். ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 1968-1970 வரை விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அப்போது இந்திய பிரசா உரிமை கோரி விண்ணப்பித்தவர்களின் தொகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட தொகையை விட குறைவாகவே இருந்தது. இந்தியாவுக்கு செல்பவர்களுக்கு காணி, பணம், வீடு அனைத்தும் வழங்கப்பட்டு ஒரு வசதியான வாழ்வு அமைத்துக் கொடுக்கப்படும் என்ற பொய்யான பிரசாரத்தின் மத்தியிலேயே இவர்கள் இந்தியப் பிரசா உரிமைக்கு விண்ணப்பித்தார்கள். அப்படியிருந்தும் எதிர் பார்த்த அளவு விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. இந்நிலையில் ஆங்காங்கு வன்செயல்கள் தூண்டப்பட்டு ஒரு பாதுகாப்பற்ற சூழல் செயற்கையான முறையில் உருவாக்கப்பட்டது. இவ்வாறு தான் இந்திய பிரசா உரிமைக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. எனவே இது அவர்கள் சுயவிருப்பத்தின் பேரில் மேற்கொண்ட முடிவல்ல. மேலும் இன்று 20 வயசாக இருக்கும் இளைஞர்கள் [illegible] விண்ணப்பம் கோரப்பட்ட காலத்தில் பிறந்திருக்கவில்லை. அன்று 50 வயதாக இருந்தவர்கள் இன்று உயிரோடுஇல்லை. எனவே முன்னைய தலைமுறை அன்று நிலவிய சூழலில் எடுத்த ஒரு முடிவை இன்றைய தலைமுறையினர் மீது திணிப்பது என்ன நியாயம்? ஒருவர் ஒரு நாட்டில் 5வருடங்களுக்கு தொடர்ச்சியாக வாழ்ந்தாலே அவருக்கு அந்நாட்டில பிரசா உரிமை வழங்க வேண்டும் என்பது சர்வதேச பொது விதியாகும், 150 வருடமாக இந்நாட்டில் வாழும் ஒரு மக்கள் கூட்டத்தை நாடுகடத்த யாருக்கும் உரிமையில்லை இன்று இந்திய கடவுச் சீட்டு பெற்றவர்களில் 98 வீதமானவர்கள் இலங்கையில் வாழ விரும்புகிறார்கள்.

கேள்வி: கடந்த பொதுத் தேர்தலில் திரு.சந்திரசேகரன் (PLOT' புளொட் இயக்கத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் அபேட்சகராகப் போட்டியிட்டார். பின்னர் அதிலிருந்து பிரிந்ததேன்?

பதில்: உண்மை என்னவென்றால் புளொட் இயக்கத்துடன் அவர் சேரவும் இல்லை, பின்னர் பிரியவும் இல்லை. நடந்தது இதுதான். திரு. சந்திரசேகரன் தேர்தலில் போட்டியிடுவதாக நியமனப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு 4 நாட்களுக்கு முன் தான் (அதாவது 1989-01-02) தீர்மானிக்கப்பட்டது. அனைவரதும் ஏகமனதான தீர்மானம் தனித்து சுயேட்சையாகப் போட்டியிட வேண்டும் என்பதாகவே இருந்தது ஆனால் சட்டப்பிரச்சினை ஒன்றைச் சமாளிக்க வேண்டியிருந்தது. சுயேச்சைக் குழுக்கள் தமது நியமனப் பத்திரத்தை கடைசித் திகதிக்கு 14 நாட்களுக்கு முன்னர் தாக்கல் செய்யவேண்டும். ஆனால் 4 நாட்களே எஞ்சியிருந்தன. இநநிலையில் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் பேரிலேயே [illegible] தர்ப்பத்தில் எந்த நிபந்தனையும் இன்றி காலஞ்சென்ற திரு உமா மகேஸ்வரன் அவர்கள் தமது கட்சி சின்னத்தை இரவலாகக் கொடுத்தார். எனினும் இந்த ஏற்பாடு திரு.சந்திரசேகரனின் ஆதரவாளர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. எனவே அவர்கள் தேர்தல் மேடை தோறும் தேர்தல் முடிந்து ஒரு வாரத்துக்குள் தனியான ஒரு கட்சியை அமைப்பதாக உறுதியளிக்கும்படி வலியுறுத்தினர். இவ்வாறு தான் தேர்தல் முடிவடைந்த ஐந்து நாட்களில் அதாவது, 89.02.20ஆம் திகதி எந்த ஒரு கட்சியுடனும் தொடர்பு அற்ற முறையில் சுயேச்சையான கட்சியாக 'மலையக மக்கள் முன்னணி' உருவானது.

நன்றி - நூலகத்திட்டம்

# கிளார்க்
# தூண்
# நெல்ச
# அகப்ப



நெல்சன், வின்னி.

> ''அரசின் நிறவெறி ஒடுக்குமுறை தொடரும் வரை ஆபிரிக்க தேசிய கொங்கிரசின் அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டம் ஓயப்போவதில்லை.''

சிறையில் அடைக்கப்பட்டு 27 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த பெப்ரவரி மாதம் விடுவிக்கப்பட்ட ஆபிரிக்க தேசிய கொங்கிரசின் தலைவர் நெல்சன் மண்டேலா அவர்களிடம் ஆயுதப் போராட்டம் பற்றிப் பத்திரிகை நிருபர்கள் கேட்ட போது அவர் சொன்ன பதில் இது. 1963ல் அவர் தலைமறைவு வாழ்வில் ஈடுபட்டிருந்தபோது ஒரு உளவாளியினால் காட்டிக் கொடுக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். 1961ல் நெல்சன் மண்டேலாவின் பெயரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று ஆபிரிக்க கறுப்பின மக்கள் ஒரு பொது வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இந்த வேலை நிறுத்தத்திற்கு தலைமை தாங்கியதும் சட்டபூர்வமற்ற வழியில் நாட்டை விட்டு வெளியேறியதுமான குற்றச்சாட்டுகளின் பேரில் கைதுசெய்யப்பட்ட நெல்சன் மண்டேலா ஐந்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். இந்தச் சிறையில் இருக்கும் போதே ஆபிரிக்க தேசிய கொங்கிரசின் செயலாளரான வோல்டர் சிசுலு உட்பட எண்மருக்கு எதிராக பயங்கரவாத வழியில் சட்ட விரோதமாக அரசைக் கவிழ்க்கச் சதி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் நடந்த விசாரணையில் ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

நெல்சன் மண்டேலாவின் இந்த 27 ஆண்டு சிறை வாழ்க்கைக் காலத்தில், ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் பிரமிக்கத்தக்க வேகத்துடன் வளர்ந்து உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் அரசுக்கு பல நெருக்கடிகளை தருவதில் வெற்றி பெற்றது, தென்னாபிரிக்க நிறவெறி அரசுக்கு எதிராக உலக நாடுகளை வென்றெடுப்பதில் அது பெருமளவு முன்னேறியது. வெளியிலிருந்த நெல்சன் மண்டேலாவை விட சிறையிலிருந்த அவர் மிகவும் சக்திவாய்ந்தவராக இருந்தார். அவர் பெயரால் உலகமெங்கும் தென்னாபிரிக்க நிறவெறி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் எழுந்து அரசை நிர்ப்பந்தித்தன. இந்த எதிர்ப்புகளை சமாளிக்க முடியாத அரசின் தற்போதைய தலைவர் W. F. கிளார்க் நெல்சன் மண்டேலாவை விடுவிப்பதன் மூலமும் ஆபிரிக்க மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற அவருடன் சமரசம் செய்து கொள்வதன் மூலமும் ஆபிரிக்க தேசிய கொங்கிரசிற்கு சில சலுகைகளை வழங்கி நிலமையை சமாளிக்க விரும்பினார். கடந்த பெப்ரவரி 11ம் திகதி 27 ஆண்டுகளின் பின் 72 வயதான நெல்சன் மண்டேலா விடுவிக்கப்பட்டார். அவரை வரவேற்க தென்னாபிரிக்காவில் ஜோன்ஸ்பேர்க் நகர வீதியெங்கும் பல லட்சக் கணக்கான மக்கள் ஆரவாரத்துடன் திரண்டனர்.

தன்மீது நம்பிக்கை வைத்திருக்கும் ஆபிரிக்க மக்களின் நலன்களை ஒருபோதும் விட்டுக் கொடுக்க தயாரில்லை என்பதை தெளிவுபடுத்தும் விதமாக, 'ஆபிரிக்க மக்களின் ஆயுதப் போராட்டம் தொடரும்' என அவர் முழங்கியிருக்கிறார். இது சமரச நோக்கத்துடன் முனைந்த கிளார்க் அரசுக்கு பலத்த ஏமாற்றமாக அமைந்துள்ளது. ஆயினும் அது தொடர்ந்து கொங்கிரஸ் தலைவர்களுடன் சமரச முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

## 2

1904இல் நடைபெற்ற தென்னாபிரிக்க பூர்வகுடிகளின் ஆயுதமேந்திய கிளர்ச்சி அடக்கப்பட்டதைத் தொடர்ந்து தேசியவாத அமைப்பு தோன்றும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆயினும் 1912ல் தென்னாபிரிக்க மக்களின் தேசிய கொங்கிரஸ் உருவாகும் வரை அரசியல் ரீதியில் அத்தனை தீவிரமாக இருக்கவில்லை. பின்னாளில் ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் எனப் (A.N.C) பெயர் மாற்றப்பட்ட தென்னாபிரிக்க மக்களின் தேசிய கொங்கிரஸ் என்ற ஸ்தாபனத்தின் ஸ்தாபகர்களாக லிகிதர்கள், சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள் போன்ற படித்த நகர்ப்புற நடுத்தரவர்க்கத்தினரும் பாரம்பரிய விவசாயிகள் தலைவர்கள் மற்றும் பூர்வகுடித்தலைவர்களும் இருந்தனர்.

அமைப்பளவில் அமெரிக்க கொங்கிரசைப் போன்றிருந்த இந்த ஆபிரிக்க தேசிய கொங்கிரஸ் மக்களின் மேம்பாட்டுக்காகவும், பாராளுமன்றத்தில் நிற ரீதியான தடையை நீக்கவும், கல்வி மற்றும் தொழில்துறையில் இருந்த நிறரீதியான பாகுபாட்டை அகற்றவும் சட்டபூர்வ வழிமுறைகளில் வேலை செய்தது. படிப்பறிவற்ற ஆபிரிக்கர்களால் ஆட்சி செய்ய முடியாது என்று வெள்ளையர் அரசு கூறி வந்தது. ஆபிரிக்க கறுப்பின மக்கள் நம்பிக்கையுடன் படிப்பதிலும் தமது உரிமைகளுக்காக அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டுகோள் விடுத்தல் என்பவற்றிலும் தொடர்ந்து ஈடுபட்ட போதும் வெள்ளை ஆட்சியில் எந்த மாற்றமும் இருக்கவில்லை.

முதலாவது உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து அனுமதிப்பத்திரத்திற்கு (Passes) எதிரான பெண்களின் கிளர்ச்சி நடந்தது. 1919ல் முதலாவது துப்பரவுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் ஜோன்ஸ் பேர்க்கில் நடைபெற்றது. அதே வருடம் அனுமதிப்பத்திரங்களுக்கு பல எதிர்ப்புகள் எழுந்தன. 40,000 அரசாங்கத் தொழிலாளர்கள் கூலி உயர்த்தக் கோரி வேலை நிறுத்தத்தில் குதித்தனர். 1920இல் திரும்பவும் அனுமதிப்பத்திரத்திற்கு எதிரான பெண்களின் எழுச்சி நடந்தது.

முப்பதுகளிலும், நாற்பதுகளிலும் பல வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் நடைபெற்ற போதும் அன்றைய தேசிய கொங்கிரஸ் தலைமை தீவிர நடவடிக்கைகளுக்கு தயாராக இருக்கவில்லை. ஆயினும் கொங்கிரசுக்குள் இது தொடர்பான நெருக்கடிகள் தலைமைக்கு தீவிரவாதிகளால் ஏற்படுத்தப்பட்டு வந்தன, நாற்பதுகளில் தீவிரமடைந்த இந்த நெருக்கடிகளின் பயனாக கொங்கிரஸ் புதிய தொரு யாப்பை உருவாக்கிக் கொண்டது. இது அதிக சனநாயகத்தன்மை வாய்ந்ததாக இருந்ததுடன், ஒரு இளைஞர் அணியும் தோற்றுவிக்கப்பட்டது. ஒரு புதிய சந்ததி இந்த அணியில் சேர்ந்து அரசியலில் பங்கு கொள்ளத் தொடங்கியது. இதில்தான் சொந்தமாக கற்று முன்னேறிய தொழிலாளியான வால்டர் சிசுலுவும், பூர்வீக முறைத் திருமணத்திலிருந்து தப்புவதற்காக ஜோன்ஸ் பேர்க்குக்கு ஓடிவந்த நெல்சன் மண்டேலாவும் இணைந்து அரசியலில் இறங்கினர். இந்த இளைஞர் அணியானது, கொங்கிரசின் கடந்த கால கொள்கைகளை பகிரங்கமாக விமர்சித்தது. சமரசவாத, மிதவாத தலைமைகளையும் அது தீவிரமாக விமர்சித்தது

1945இல் கொங்கிரஸ் 'ஆபிரிக்கர்களின் கோரிக்கைகளை' முன்வைத்தது. அவை மிகவும் தெளிவாக பின்வருபவற்றை வலியுறுத்தின.

1. ஒரு மனிதனுக்கு ஒரு வக்கு.
2. நீதி மன்றங்களில் சமமான நீதி.
3. நிலத்தை சொந்தமாக்கிக் கொள்ளும் சுதந்திரம்.
4. கறுப்பர்க்கு மட்டுமே உரிய அனுமதிப்பத்திரம் பற்றிய சட்டத்தை நீக்கல்.

இந்த அடிப்படை உரிமைகளை முன்வைத்து கொங்கிரஸ் தொடர்ந்து போராடியது. இளைஞர் கொங்கிரசின் நெருக்குதல்களினால் கொங்கிரஸ் 1949இல் 'நடவடிக்கைத் திட்டம்' ஒன்றை முன்வைத்தது. அது, வேலை நிறுத்தம் ஹர்த்தால், ஒத்துழையாமை, சிவில் ஒழுங்கு முறைகளை மீறல் போன்றவற்றை செயல்படுத்த ஒப்புக் கொண்டது. வெள்ளையர் அரசினால் கொண்டுவரப்பட்ட 'கம்யூனிச ஒழிப்பு சட்டம்' அனைத்துப் போராட்டங்களையும் நசுக்கப் பயன்படுத்தப்பட்டது. கொங்கிரஸ் இதற்கெதிராக வேலை நிறுத்தங்களை ஒழுங்கு செய்தது. ஆயினும் இவை வன்முறை வடிவங்களை எடுக்கவில்லை. இது பற்றி ரிவோனியா விசாரணையின்



> போது பேசுகையில் மண்டேலா சொன்னார். '1949ன் பின்பும் கூட கொங்கிரஸ் வன்முறையில் ஈடுபடவில்லை. ஆயினும் கடந்தகாலத்தில் செய்யப்பட்ட சட்டபூர்வ வழியிலான நடைமுறையிலிருந்து எமது போராட்டம் மாறுபட்டிருந்தது. அந்த மாற்றமானது, அமைதியான ஆனால் சட்டவிரோதமான வழிகளில் நிறவெறிச் சட்டங்களை எதிர்ப்பதாகும். இந்தப் போராட்டங்கள் தன்மையான எதிர்ப்புப் போராட்டங்களாக இருந்தன. 8500க்கு மேற்பட்டவர்கள் நிற ஒதுக்கல் சட்டத்தை எதிர்த்து சிறை சென்றார்கள். ஆயினும் வன்முறை பாவிக்கப்பட்டதற்கான ஒரு சிறு உதாரணம் கூட அங்கு இருக்கவில்லை...''

1960இல் ஆபிரிக்க மக்களின் தலைவர்கள் ஒவ்வொருவருடைய நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தப்பட்டன. நெல்சனுக்கோ ஜோன்ஸ்பேர்க்கை விட்டு வெளியேறவோ, கூட்டங்களில் பங்கு பற்றவோ பேசவோ ஏற்கனவே உரிமை மறுக்கப்பட்டிருந்தது. அமைதியான ஊர்வலம், பேச்சு, அரசியல் அமைப்பாக்கல் அனைத்தும் சட்டவிரோதமாக்கப்பட்டன.

1960 மார்ச் மாதம் கொங்கிரசில் இருந்து பிரிந்த P.A.C (Pan Africanist Congres) என்ற அமைப்பால் அனுமதிச் சீட்டுக்கு எதிராக ஒழுங்கு செய்யப்பட்ட அமைதி ஊர்வலம் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து தேசிய கொங்கிரஸ் ஒரு தேசிய வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விட்டது. இதற்கு பெரும் ஆதரவு கிடைத்தது. PAC யும் ANC யும் சட்டவிரோதமான அமைப்புக்களாக அறிவிக்கப்பட்டன. ஐந்து மாதம் நீண்ட அவசரகால நிலையின் கீழ் ஒவ்வொரு தெரிந்த கொங்கிரஸ் உறுப்பினரும் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் கொங்கிரஸ் உடனடியாகத் தன்னை தலைமறைவு வாழ்வுக்கு தயாராக்கிக் கொண்டது.

1961இல் தென்னாபிரிக்கா தேசிய குடியரசாக பிரகடனப்படுத்தப்பட இருந்தது. இதற்கு ஒரு வெள்ளையர் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடைபெற்றது. ஆனால் எந்தவொரு கறுப்பரும் கலந்தாலோசிக்கப்படவில்லை. ஆபிரிக்க மக்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்க ஒரு பொது வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்ய வேண்டுமென கொங்கிரஸ் கருதியது. நெல்சனின் பேரால் இந்த வேலை நிறுத்த அழைப்பு விடப்பட்டது. இதற்கு பெருமளவு ஆதரவு கிட்டியது. தனது மனைவியையும் குழந்தைகளையும்

நன்றி - நூலகத்திட்டம்



# ின்
# டிலில்
# ா
# டுவாரா?

'தென்னாபிரிக்க வெள்ளை அரசின் நிற ஒதுக்கல் தொடரும்வரை ஆயுதப் போராட்டம் தொடரும்...'' என்றார்.



வோல்டர் ஸிஸிலு.

தென்னாபிரிக்காவின் ஜனாதிபதி F. W. டி கிளார்க்கின் அரசு, தென்னாபிரிக்காவின் நான்கு மாநிலங்களில் மூன்றில் அவசரகால நிலையைத் தளர்த்தியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகாலமாக இருந்துவரும் இந்த அவசரகால நிலை முற்றாக நீக்கப்படாதவரை சுமுகமான பேச்சுத் தொடர வாய்ப்பில்லை என தென்னாபிரிக்க தேசிய கொங்கிரஸ் தெரிவித்து வருகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட A. N. C. யின் தலைவர் திரு. நெல்சன் மண்டேலா அவர்கள், தென்னாபிரிக்காவுக்கு எதிரான பொருளாதார தடைகளை தளர்த்தும் ஐரோப்பிய சமூக நாடுகளின் நடவடிக்கையை கண்டித்ததுடன், நேட்டாலில் இன்னமும் இருக்கும் அவசரகால நிலை நீக்கப்படுதல் அவசியம் என வலியுறுத்தியுள்ளார்.

கடந்த ஏப்ரலில் எழுதப்பட்ட இக்கட்டுரை ஆபிரிக்கர்களின் போராட்டம் பற்றிய ஒரு அறிமுகத்தை தருகிறது.



வீட்டையும் விட்டு தலைமறைவு வாழ்வை தொடங்கினார் நெல்சன். தனது முக்கியமான சில அரசியல் சகாக்களை மட்டும் சந்தித்து போராட்டத்தை ஒழுங்குபடுத்தி வந்தார் அவர்.

இந்த வேலை நிறுத்தம் முன்னெப்போதும் நடந்திராதபடிக்கு இராணுவமும், பொலிசும் குவிக்கப்பட்டு ஈவிரக்கமின்றி நசுக்கப்பட்டது. இது போன்ற அமைதியான போராட்டங்களும் நசுக்கப்படுமானால் மக்கள் வேறு வழிகளில் போராடுவதற்கு தவிர்க்கமுடியாதபடிக்கு தள்ளப்படுவது இயல்பே. கொங்கிரசோ இன்னும் ஒரு சாதாரண தேசபத்த தேசிய வாத இயக்கமாக இருக்கவில்லை, அது ஏற்கனவே ஒரு தலைமறைவு அமைப்பாக மாறியிருந்தது. 1961இன் இறுதிப் பாதிக் காலம் வன்முறை நடவடிக்கைகள் நாட்டை அதிர்ச்சியுறச் செய்தன. இவற்றை நடாத்தவென 'தேசத்தின் ஈட்டிமுனை' (Spear of the nation) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

63ல் நெல்சன் கைது செய்யப்பட்டபோதும், கொங்கிரசின் நடவடிக்கைகள் தொடர்ந்தன. 27 வருடங்களின் பின் விடுவிக்கப்பட்ட போதும் அவர் புகழ்பெற்ற றிவோனியா விசாரணையில் (Rivonia Trial) தெரிவித்ததையே திரும்பவும் சொன்னார் றிவோனியா விசாரணையின் போது அவர் சொன்னார்;

''1961 யூன்மாத தொடக்கத்தில், தென்னாபிரிக்க நிலமைபற்றிய நீண்ட கால மதிப்பீட்டின்பின் நாங்கள் இந்த நாட்டில் வன்முறை தவிர்க்க முடியாதது என முடிவுக்கு வந்தோம். ஆபிரிக்கத் தலைவர்கள் தொடர்ந்தும் அமைதியையும், 'அகிம்சையையும் போதித்துக் கொண்டிருப்பது யதார்த்த நிலமைகளுக்கு ஒவ்வாதது. அதுவும், எல்லா அமைதிவழிப் போராட்டங்களையும் ஆயுதமுனையில் அரசு எதிர்கொள்ளும்போது கொஞ்சம்கூட பொருத்தமற்றது என முடிவு செய்தோம். இது மிகவும் இலேசாக வந்த முடிவல்ல. அமைதிவழி எதிர்ப்புக்கான எல்லாவித பாதைகளும் அடைபட்ட பின்னர், எமது எல்லாப் பிறவழிமுறைகளும் தோல்வி கண்ட பின்னர் தான் நாம் இம்முடிவுக்கு வந்தோம். 'தேசத்தின் ஈட்டிமுனை' அமைப்பை தோற்றுவித்து அதன் பிரகடனத்தை 1961 டிசம்பர் 16ம் திகதி வெளியிட்டோம்...''

27 ஆண்டுகளின் பின்னர் சிறைமீண்ட அவரிடம் ஆயுதப் போராட்டம் பற்றிய அபிப்பிராயம் கேட்கப்பட்ட போதும் நெல்சன் மண்டேலா ஒரு உறுதியான சனநாயகப்பற்றாளர். மேலைநாட்டு சனநாயக முறைகளில் அவருக்கு அளவுகடந்த நம்பிக்கை இருந்தது. அடிப்படை மனித உரிமைகளே மறுக்கப்பட்ட தென்னாபிரிக்காவில் அவர் ஒரு இலட்சிய சனநாயக சமூகத்தை நிறுவக் கனவு கண்டார். அதற்காக உறுதியுடன் போராடினார். அவர் வெள்ளை ஆதிக்கத்திற்கு எதிராக மட்டுமல்ல கறுப்பு இன தீவிர வாதத்திற்கு எதிராகவும் போராடினார். தனது விசாரணை முடிவில் அவர் சொன்னார். 'எனது வாழ்நாளில் நான் என்னை ஆபிரிக்க மக்கள் போராட்டத்திற்காக அர்ப்பணித்துள்ளேன். நான் வெள்ளை அதிகாரத்திற்கு எதிராகப் போராடி வந்துள்ளேன். அதே போல கறுப்பு மேலாண்மைக்கு எதிராகவும் போராடிவந்துள்ளேன். நான் சுதந்திரமும் சனநாயகமும் சமத்துவமும் கொண்ட ஒரு இலட்சிய சமூகத்திற்காக என்னை ஈடுபடுத்தியுள்ளேன். இந்த இலட்சியத்தினை அடைவதற்காக வாழவும், தேவைப்படின் மடியவும் நான் தயாராக உள்ளேன்.'

தொழிலால் சட்டத்தரணியான நெல்சன் மண்டேலாவின் இயல்பு பற்றி எழுதுகையில், கொங்கிரசின் இன்னொரு தலைவரும் நெல்சனின் நண்பருமான ஒலிவர் தம்போ சொல்கிறார்.. 'ஒரு மனிதன் என்ற முறையில் நெல்சன் எளிதில் உணர்ச்சிவசப்படுகிற, மானமுள்ள, அவமதிப்புக்கு எதிராக பதிலடி கொடுக்கவும் எதிர்க்கவும் விரைவாகவே இறங்கிவிடுகிற இயல்புள்ளவர். அவரிடம் ஒரு இயல்பான ஆளுமை இருந்தது. கூட்டத்தை கவர்வதில் இணையற்றவர். உயரமும், பண்பான தன்மையும், இளைஞர்களால் பெரிதும் நம்பப்படுபவருமான அவர் அஞ்சா நெஞ்சம் படைத்த அர்ப்பணிப்புள்ள ஒரு பிறவித் தலைவராவார்...'

27 ஆண்டுகளுக்குப் பின் சிறைமீண்டுள்ள நெல்சனிடம் அதே துடிப்பும் ஆளுமையும் கூடவே அமைதியும் தெரிகிறது. ஆயினும், அவர் வெளிவந்ததற்கு காரணமாக அமைந்த டி. கிளார்க்கின் சீர்திருத்தக் கொள்கைகள் கொங்கிரசுக்கும் அரசுக்கும் இடையில் சமரசத்தை நிலைநாட்ட நெல்சனையும் பாவிப்பதில் வெற்றி பெறுமா என்பதே இப்போது பலருடையதும் கேள்வியாகும். 27 ஆண்டுகளுக்கு முதல் இருந்த அதே தீவிரமும் துடிப்பும் இப்போதும் இருப்பது அவரது பேச்சில் தொனித்த போதும் இத்தனை ஆண்டுகால அரசியல் போக்கின் வளர்ச்சியை அவர் சரிவர இனம் கண்டுள்ளாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆபிரிக்க மக்களின் விடுதலை என அவர் 27 ஆண்டுகளுக்கு முன் கொண்டிருந்த அதே கருத்துக்களுடன் தான் மக்கள் முன் தோன்றி பேசினார். 27 ஆண்டுகளுக்கு பிறகும் கூட அவரது அன்றைய கொள்கைகளினை வலியுறுத்திப் பேச வேண்டிய தேவை இருப்பினும் அவற்றில் ஒருவகைப் பலவீனம் இருப்பதை மறந்துவிட முடியாது கிளார்க்கின் சீர்திருத்தக் கொள்கைகள் ANCயின் அரசியல்முன்முயற்சிக்கு ஒரு சோதனையாக அமைந்து விடுகிற வாய்ப்பும் நிலவவே செய்கிறது. அவசரகால நிலையை நீக்குதல் மற்றும் அரசியல் கைதிகள் விடுதலை என்பவை போன்ற உடனடி கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுவார்த்தை தொடரினும். அரசில் ஆபிரிக்கர்களுக்கும் பங்கு கோரும் நிலமையை மீறி ANC வளருவது அவசியம். ஆபிரிக்க மக்களின் சுதந்திரம் அவர்களின் ஆட்சி அதிகாரத்தோடு சம்பந்தப்பட்டது என்பதை வலியுறுத்தி தொடர்ந்து கொங்கிரஸ் போராடுவதில் தான் நெல்சனின் விடுதலையின் வெற்றியே தங்கியுள்ளது

ஆபிரிக்க மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற தலைவரான நெல்சனை வானளாவ புகழ்கிற கிளார்க்கும், அமெரிக்காவும் 'கறுப்பு மேலாண்மைக்கும் வெள்ளை மேலாண்மைக்கும்' எதிரானதாக அவர் கடைப்பிடிக்கும் கொள்கையால் நப்பாசைப்பட்டு சமரசப்படுத்த முனைவது வெளிப்படையாகவே தெரிகிறது. தனது சொந்த இயக்கத்துள்ளேயே நடந்திருக்கக்கூடிய கொலைகளை பகிரங்கமாகக் கண்டிக்கும் நெஞ்சுரமும் நேர்மையும் மிக்க நெல்சன், தமக்கு நைஜீரியா வழங்கிய அதியுயர் கௌரவப் பட்டமான ''சமாதானத்தின் தூதுவன்'' என்ற பட்டம் தமது மக்களுக்கும் கட்சிக்கும் அளிக்கப்பட்ட கவுரவமாக கண்ட நெல்சன், ஏகாதிபத்திய மற்றும் இன வெறியர்களின் கபடங்களுக்கு இலேசில் பலியாகி விட மாட்டார் என்பதே அனைத்துலக சனநாயக மற்றும் விடுதலை விரும்பிகளதும் விருப்பமாகும்.

— தென்னாபிரிக்க நிருபர் —



நன்றி - நூலகத்திட்டம்



# பால்வேறுபாடும் பெண்நிலைவாதமும்

ஆண்மையும் பெண்மையும் பிறப்பிலேயே வேறு வேறாகத் தீர்மானம் செய்யப்பட்டுள்ளனவா? ஆண்கள் யுத்தம் புரிவதற்கென்றும் பெண்கள் இல்லக் கிழத்திகள் என்றும் பிறப்பிலேயே ஏதாவது திட்டமிடல் நடந்துள்ளதா?

ஆண் பெண்குழந்தைகளை அவற்றின் 'பாரம்பரிய' குணாம்சங்களை மீறி வளர்க்க விரும்புகிற பெற்றோர்கள் அடிக்கடி கேட்டுக் கொள்ளும் கேள்விகளில் சிலவே மேலுள்ளவை,

ஒரு நூற்றாண்டுக்கு மேலாக உயிரியலாளர்களும் உளவியலாளர்களும், சமூகவியலாளர்களும், மானுடவியலாளர்களும் மனிதர்களிடையே குணவியல் சார்ந்த பால்வேறுபாடுகளின் ஊற்று மூலம் என்ன என்று ஆய்ந்து வந்துள்ளனர். இந்த நூற்றாண்டுமிக ஆரம்பத்தில் புத்திசாலித்தனமும். அறிவும் மூளையின் அளவில் தங்கியிருக்கிறது என்றும் 'இயல்பாகவே' ஆண்களுக்கு மூளையின் அளவு பெரிதென்றும் எனவே கலை விஞ்ஞானம் அறிவுத்துறைகளில் ஆண்களின் மேலாட்சி நிலவியேதிரும் என்றும் சொல்லப்பட்டது. ஆண் மேலாதிக்க வாதத்துக்கு அழகிய முறையில் நியாயம் செய்த கருத்து காலகதியில் அழிந்து விட்டது.

ஒரு சின்ன உதாரணம், மூளையின் கொள்ளளவைப் பற்றி ஆய்வு செய்த ஒரு விஞ்ஞானி, பெண் விஞ்ஞானிகள் சிலரதும் ஆண் விஞ்ஞானிகள் சிலரதும் மூளைக்கொள்ளளவை ஆய்ந்த போது மிகப் புகழ்பெற்ற ஒரு ஆண் மானுடவியலாளரின் மூளையே அனைத்திலும் மிகச் சிறியதெனத் தெரிய வந்தது.

பால்வேறுபாடுகள் பற்றி ஆய்வு. செய்வதற்கு பெண்நிலைவாதிகள் கொள்கை ரீதியான எதிர்ப்பைத் தீவிரமாகக் காட்டி வருகிறார்கள். ஏனெனில் ஆய்வு முடிவுகள் எப்படியிருந்த போதிலும் அவை பெண்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன, பயன்படுத்தப்படும் என்று அவர்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

அண்மைக்கால ஆய்வுகள் வெளிபடுத்தியிருக்கும் அடிப்படையான ஒரு அம்சம் எதிர்கால ஆண்-பெண் உறவுநிலைகளைத் தீர்மானிப்பதில் முக்கியமானது.

பாரம்பரியமான, வகைமாதிரி (Stereotype) ஆண் - பெண் இயல்புகள் எவ்வளவு இறுக்கமாகச் சமுதாயத்தில் பேணப் பட்டாலும் ஒரு தனி நபர் வளர்ப்பு முறை மூலம் அதனை மாற்ற முடியும். மிகச் சுலபமாகச் சொல்வதானால் ஆண் பெண் குழந்தைகளின் குணவியல் உருவாக்கத்தில் வளர்ப்பு

முறை பெற்றோரின் தீர்க்க தரிசனம் என்பன முக்கியமான பங்கு வகிக்கின்றன என்பதே.

உயிரியலுக்கும் கலாசாரத்துக்குமிடையேயான போராட்டம் குறித்து எவர் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் ஆண் பெண் பால்வேறுபாடுகளை விட ஒருமைப்பாடுகளே அதிகம் என்பது சுவாரசியமான ஒரு உண்மையாகும் மேலும் ஆண்களுக்கிடையேயும் பெண்களுக்கிடையேயும் அவரவர்களுக்குள் கிடைக்கப் பெறும் வேறுபாடுகள் ஆண் - பெண் வேறுபாடுகளை விடப் பலமடங்கு - சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் -அதிகமாகும்.

எனினும் உயிரியல் விஞ்ஞானம் சார்ந்து பால் வேறுபாடுகளை விளக்கும் தீவிர முயற்சிகளும் அண்மைக்காலங்களாக வளர்ந்து வருகின்றன. பல தளங்களிலிருந்தும் இம் முயற்சிகளுக்கு எதிர் முயற்சிகளும் கண்டனங்களும் உள்ளன.

ஆண், பெண் ஆகியோரது மூளைகளும் உடலமைப்பும் வேறுபட்ட முறையில் வளர்வது அந்த அந்த உடல்களில் கிடைக்கும் ரெஸ்ரோஸ்ரெறோன் எனும் ஓமோனின் (ஓமோன்- Hormone - என்பது ஒருவகை உயிரசாயனத் தூண்டி ஆகும்.) அளவில் தங்கியுள்ளது. மற்றும் இந்தக் கூற்றுக்கான பெருமளவு நியாயம் விலங்குகளின் மீது நடாத்தப் பெற்ற பரிசோதனைகளிலிருந்தே வருகிறது. உதாரணமாக ரெஸ்ரோஸ் ரெறோன் ஓமோன் மேலதிகமாகத் தரப்பட்ட போது எலிகளில் மூளை வளர்ச்சி வேறுபட்டுக் காணப்பட்டது. ற்சஸ் என்னும் ஒரு வகைக் குரங்கின் மீது இவ் ஓமோன் பரீட்சை செய்து பார்க்கப்பட்டபோது விளைவுகள் ஆண் பெண் குரங்குகளில் வேறு வேறாக இருந்தன.

ஓமோன் சிகிச்சை பெற்ற ஆண் குரங்கு ஒன்று தன்னுடைய கூட்டினுள் இடப்பட்ட குரங்குக் குட்டியைத் தாக்க முற்பட்டது. ஆனால் பெண் குரங்குகள் பெருமளவில் குட்டியை பேணும்முயற்சியிலேயே ஈடுபட்டன. எல்லா மிருகப் பழக்கவழக்கங்களுக்கும், மனிதச் சமாந்தரங்கள் உண்டு என்ற கருத்தை விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்வதில்லை எனினும் மானுடவியலிலிருந்து வரும் சில ஆதாரங்களை நாம் கவனத்திலெடுக்கலாம்.

உதாரணமாக கலாசாரங்களுக்கிடைப்பட்ட பல ஆய்வுகளிலிருந்து தெரிய வருவது என்னவெனில், வன்முறையைப் பொறுத்து வித்தியாசமான கலாசாரங்களுக்கும் வித்தியாசமான சமுதாயங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருந்தாலும் எல்லாச் சமுதாயங்களிலும் பெண்களைவிட ஆண்கள் ஆக்கிரமிப்பு மனோபாவம் அதிகம் உள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

எனினும் ஆக்கிரமிப்பு மனோபாவம் என்று இங்கு நான் குறிப்பிடுவதை உடல் சார்ந்த வன்முறை (Physical Violonce) என்ற அர்த்தத்திலேயே விளங்கிக் கொள்ள வேண்டும் என்பது முக்கியமானது. போட்டி மனோ



பாவம், மனோவியல் வன்முறை, ஆக்கிரமிப்பின் ஏனைய வடிவங்களைப் பொறுத்தவரை ஆண்களுக்கும் டெண்களுக்கும் எத்தகைய வேறுபாடும் இல்லை. (உதாரணமாகப் பெரிய நிறுவனங்களின் தலைவிகள் அரசியல், தலைமையிலிருக்கும் பெண்கள் ஆண்களைப் போலவே ஆக்கிரமிப்புணர்வுடன் அதிகாரத்தை வீசி வாழ்வதைப் பார்க்கலாம்!

பெண்களும் தாய்மையும் பிரிக்க முடியாத அம்சமாக இருப்பது போலப் பட்டாலும் உயரியல், பெண்களை மென்மையானவர்களாகவும் அன்புடையோராகவும், தாய்மை உணர்வைத் தருவதாகவும் தயார்ப்படுத்துகிறது என்பதற்கு விஞ்ஞான ரீதியாக உறுதியான சான்றுகள் இல்லை என்று மேலும் தெரிய வருகிறது.

சமூக விஞ்ஞானிகளும் உயிரியலாளர்களும் பால் வேறுபாடுகள் குறித்து ஒரு போதும் உடன்பாட்டிற்கு வரமுடியாமல் போகலாம். ஆனால் எமது குழந்தைகள் ஒரு நாள் தமக்கிடையேயான ஒற்றுமைகளே அதிகம் என்று மட்டும் உணர்கிற காலம் ஒன்று வரும் இதற்காக உங்கள் குழந்தையை தயார் செய்ய நீங்கள் ஆயத்தமா?

## நிகழ்-2.

இது தான் என்னுடைய நாடு
தென்னாசியாவின் ஒரு மூலை

உலகமே கேள்:
சொர்க்கத்திலிருந்து ஒரு கூப்பிடு தொலைவில்
இருக்கிறது என்னுடைய தேசம் என்று
யாரோ சொன்னார்கள்
எப்போதோ.
இப்போது,
சொர்க்கத்தை இடம் மாற்றினார்களோ
அல்லது எனது தேசத்தை
இடம் மாற்றினார்களோ
தெரியவில்லை.

சிறுபுள்ளி என் தேசம்
இச்சிறுபுள்ளியில்
மலரும் பட்டிச்செடி
என் ஆத்மா
இந்தியப் பெரு மர நிழலில்
சோகை பிடித்த வாழ்வு வேண்டாம்
இந்தப் பட்டிக்கு

விலகு பெரு மரமே
ஒளி விழட்டும்...
உன் விழுதுகளை வெட்டுகிறேன்
வழி வரட்டும்...

என்னுடைய தேசம்...

மனிதர்களுடைய இடத்தை
ராணுவம் எடுத்துக் கொண்டுவிட்டது.

மனிதர்களைக் காற்றும் துயரமும்
அடித்துச் சென்று விட்டன
அவர்களது கனவுகளைக்
கண்ணீர் கரைத்து விட்டது
அவர்களுடைய மொழியும்
இறந்து விட்டது.

எங்கள் எல்லோருக்கும்
இப்போது பரிச்சயமான
ஒரே மொழி: அழுகை

நான் பலவகையான அழுகைகளுக்குப்
பழக்கப்பட்டு விட்டேன்.

எல்லாத் திசைகளையும்
தாங்கி நிற்கிறது அழுகை...

அகதி முகாம்களிலிருந்து
வைத்தியசாலையின் அறுவைச் சிகிச்சைப்
பிரிவின் நீண்ட விறாந்தையிலிருந்து
அந்நியப்படையின்
வதை கூட அறையிலிருந்து
மூடப்பட்ட கதவின் பின்புறமிருந்து
அம்மாவிடமிருந்து
அக்காவிடமிருந்து
குழந்தையிடமிருந்து...

நான் சிரித்த காலங்களுமிருந்தன.
சிரிப்பு;
பெரிய சிரிப்பு.
இலையுதிர் காலத்துக் காற்றைப் போல...

இப்போது அழுகை
பலம் சேர்க்கிறது...
சிரிப்புக்கும் கலகலப்புக்கும்
தலைமறைவு 'வாழ்க்கை...

எங்கெங்கு காணினும்
ஹே! பராசக்தி!
''அவர்கள்; அவர்கள்
நேற்று வந்தவர்கள்''

காலடி ஒவ்வோரடியும்
இரும்பு; உருக்கு;
நெருப்பு;
அழிப்பு;
எரிப்பு.

நான் சிதையுண்டேன்: சிதைந்தேன்
எனது கிளைகளும் இலைகளும்
மலர்களும் அழிந்தாலும்
வேரையும் வேரடி மண்ணையும்
பேணினேன்.

காலங்களில் அளவற்ற நம்பிக்கை
எனக்கு
என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கும்
காந்தியின் புத்திரனே!

பொய் வீசித் திரிந்தாய்
போய் ஒழிக!
பார்,
கை வீசி நடப்பேன்
பூ மலர...

— அலுஷா

நன்றி - நூலகத்திட்டம்



# 6ம் திருத்தச்சட்ட நீக்கமும் மாகாண சபைக் கலைப்பும் மட்டுமே பிரச்சினைக்குத் தீர்வு தருமா?

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ள அம்சங்கள் இரண்டு; ஒன்று அரசியலமைப்புச் சட்டத்திற்கான ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவது. இரண்டாவது வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது.

விடுதலைப் புலிகள் தரப்பில் முன்வைக்கப்பட்டு, அரசுதரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள இந்த இரண்டு விஷயங்களும் அரசியல் உலகில் பலத்த சர்ச்சைகளுக்கு இடமளித்துள்ளன.

1983 இனக்கலவரத்தை அடுத்து அரசினால் அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்ட ஆறாவது சட்டத்திருத்தம் (பெட்டியில் காண்க) தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இல்லாமலேயே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. 'இலங்கையின் ஒற்றையாட்சியைப் பாதுகாக்கவும், நாட்டை பிளவுபடும் அபாயத்திலிருந்து மீட்கவும்' என அன்றைய ஜே. ஆர். அரசினால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்தத்தை ஏற்க மறுத்து பாராளுமன்றத்திலிருந்த கூட்டணி தமிழ் எம். பிக்கள் வெளியேறியது பலருக்கும் ஞாபகமிருக்கலாம். சபையிலே பிரதான எதிர்க்கட்சி இல்லாமலே நிறைவேற்றப்பட்ட இச்சட்டப்படி சத்தியப்பிரமாணம் செய்யாமல் யாரும் பாராளுமன்றத்தில் பதவியேற்க முடியாது.

கடந்த பொதுத் தேர்தலின் போது வடக்கு கிழக்கில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றிய ஈழவர் ஜனநாயக முன்னணி இந்த திருத்தச்சட்டத்திற்கமைய சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்து, பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்கப் போவதாக முதலில் அறிவித்தது.

83ல் இதை எதிர்த்து வெளியேறிய கூட்டணியோ, பல்வேறு காரணங்களைக் கூறி நியாயப்படுத்திக் கொண்டு திரும்பவும் பாராளுமன்றத்துள் நுழைந்து விட்டது.

ஈரோஸின் இந்த அறிவிப்பிற்குப் பதிலாக ஜனாதிபதி பிரேமதாச சொன்னார் 'பாராளுமன்றத்துள் வந்து அதனை நீக்கப் போராடுங்கள்' என்று.

முதலில் மௌனமாக இருந்தாலும், பிறகு அதை ஏற்று பாராளுமன்றத்துள் நுழைந்தனர் ஈரோஸ் எம். பிக்கள்.

ஆனால் நுழைந்த போதும், அதை நீக்க எந்த முயற்சியும் அவர்கள் எடுக்கவில்லை. முயற்சி மட்டுமல்ல பாராளுமன்றத்தில் அவர்கள் பேசுவதே இல்லை என்பதுதான் மெத்தச் சரியானது. ஏனைய கட்சிகள் அவர்களை Silent Majority என்று அழைக்கிறார்கள்.

இப்போது புலிகள் - அரசு பேச்சுவார்த்தையில் அது முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்ட பின்னர், அதை நீக்க தனிநபர் பிரேரணை கொண்டுவரப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக பாலகுமார் உள்ளிட்ட தூதுக் குழு ஒன்று மற்றக் கட்சியினரைச் சந்தித்து வருகிறது. 2/3 பெரும்பான்மையை வென்றெடுத்து இதை நீக்க முடியாவிட்டால் தாம் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேறுவதாக அவர்கள் அறிவித்தும் உள்ளார்கள்.

இந்தத் திருத்தத்தை நீக்குவதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளிடமும் ஒரே மாதிரியான நிலைப்பாடு நிலவவில்லை என்பது தெளிவு. ஈ. ம. பு. வி.மு. (EPRLF) மட்டுமே, இதை நீக்க ஆதரவளிப்பதாக பகிரங்கமாக அறிவித்துள்ள ஒரேயொரு கட்சியாகும். முஸ்லிம் கொங்கிரசோ, முஸ்லிம் மக்கள் தொடர்பான தமது நிலைப்பாட்டைப் புலிகள் தெளிவாக முன்வைத்தாலொழிய நாம் இதை ஆதரிக்க முடியாது என தெரிவித்துள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இதை ஆதரிக்கவில்லை. சிங்கள அரசியலில் பெரிதும் ஆதிக்கம் செலுத்தும் பௌத்த மதபீடங்களும் இதை ஏற்றுக் கொள்வதாக தெரியவில்லை. மகா போதி சங்க தலைவரான காமினி ஜயசூரிய (முன்னாள் அமைச்சர்) இதற்கு எதிராக குரலெழுப்பியுள்ளார். 'இது நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு வழி வகுக்கும்' என்பது அவர் நிலைப்பாடாகும். இந்நிலையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியை அரசியல் நீரோட்டத்திற்கு இழுத்துவிட முயலும் பிரேமதாச அரசுக்கு இது அத்துணை இலேசான காரியமல்ல.

> எப்படியிருப்பினும், இனங்களுக்கிடையே ஐக்கியமும், சமாதானமும் நிலவுவதன் அவசியத்தை விரும்பும் எவரும் இந்தப்பிரச்சனையில் 6வது திருத்தம் நீக்கப்படுவது நியாயமானது என்பதை ஒருபோதும் ஒப்புக்கொள்ள மறுக்க மாட்டார்கள்.

இனங்களிடையேயான சமத்துவமானது பரஸ்பர சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதில் தங்கியுள்ளதென்பதையும், எந்தத் தேசிய இனமும் இன்னொரு தேசிய இனத்தைவிட எந்தச் சிறப்புரிமையையும் கொண்டிருக்க உரித்தானதல்ல என்பதையும் ஏற்றுக் கொள்கிற எவரும் தமிழ் மக்களின் இவ்வுரிமைக்கு எதிரான இந்த சட்டம் நீக்கப்படுவதை மறுக்க முடியாது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமக்கும் இடையிலான பிரச்சனை - அது எவ்வளவு முக்கியமானதென்ற போதிலும் - காரணமாக இதை ஆதரிக்க முஸ்லிம் கொங்கிரஸ் தயங்குவது நியாயமானதல்ல; ஏனென்றால், முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை அங்கீகரிக்க கோரும் மு கொங்கிரஸ், தமிழ் மக்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட 6வது திருத்தச் சட்டத்தை எதிர்க்க மறுப்பது ஏற்புடையதாக இல்லை.

கட்சிக்குள்ளும், அரசிற்குள்ளும் இது தொடர்பாக நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி இருக்கிற ஜனாதிபதி பிரேமதாஸ இதைச் சமாளிக்க எவ்வளவு தூரம் உறுதியாக இருப்பார் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஆயினும், இன்னுமொன்றை ஞாபகப்படுத்த வேண்டியதும் இவ்விடத்தில் அவசியமாகும்.

ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டால்கூட, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை ஏற்கப்படாத வரை இன அசமத்துவம் நிலவிக்கொண்டே இருக்கும்.

> உத்தியோகபூர்வ மொழியாக தமிழ் ஏற்கப்பட்ட பின்னும், தனிச் சிங்களச் சட்டம் இன்னமும் அமுலில் இருப்பது போல.
>
> இது ஆறாவது திருத்தச் சட்டம்.
>
> அடுத்தது மாகாண சபை கலைப்பு.
>
> முதலாவது விடயத்தில் சட்டத்தை நீக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவது முடியுமா என்ற பிரச்சனை என்றால், இரண்டாவதில் அரசுக்கு அதிகாரம் இல்லை என்ற பிரச்சனை.

மாகாண சபைகளை அறிமுகம் செய்கையில் அதிகாரப் பரவலாக்கலும் அதிகளவு மக்கள் மயமானதாக அரசை ஆக்கலும் தமது நோக்கம் என அன்றைய ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

கொஞ்சம் கூட அதிகாரமற்ற ஒரு சபை என அடிக்கடி ஈ. பி. ஆர். எல். எப். முதலமைச்சரால் சாடப்பட்ட இந்த மாகாண சபை இப்போது ஜனாதிபதியால் கூட சட்டபூர்வமாக அசைக்க முடியாத சபை என நிரூபித்து விட்டது அதற்கு என்ன அதிகாரங்கள் இருக்கின்றதோ இல்லையோ, இந்திய சட்ட சபைகளைப் போல, நினைத்த வேளையில் கவர்னரால் கலைக்கப்படக் கூடிய ஒரு சபையாக அது இல்லை என்பது மட்டும் தெளிவாகி விட்டது.

முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள், இந்தியப் படைகள் வெளியேறுவது நிச்சயமாகிவிட்ட கடைசி நாட்களில் செய்த ஒரு விசித்திரமான செயல்தான் இன்று இந்த மாகாணசபையின் அதிகாரத்தை வெளியில் காட்ட உதவியுள்ளது.

இது ஒரு 'சட்டவியல் நடவடிக்கை' (Constitutional move) என சொல்லியபடியே அவர் தனிநாட்டுப் பிரகடனம் செய்து மாகாண சபையை 'தமிழீழ தேசிய நிருணய சபையாக' அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து அரசு மட்டத்தில் குழப்பங்கள் ஏற்படத் தொடங்கின. மாகாண சபையை 'கலைத்துவிட வேண்டுமென்பது' அரசாங்கத்தின் மனப்பூர்வமான விருப்பம்.

ஆனால் சட்டபூர்வமாக அதைச் செய்யும் அதிகாரம் கவர்னருக்கோ ஜனாதிபதிக்கோ இருக்கவில்லை.

அதை 'கலைப்பதில்' வெற்றி பெற்றவர்கள் விடுதலைப் புலிகள் மட்டுமே. ஆயினும் அதுகூட முழுமையான வெற்றியல்ல. மாகாண சபை நாட்டை விட்டு 'ஓடிய' போதும், அது 'சட்டபூர்வமாகக்கலையவில்லை' அதை சட்டபூர்வமாக கலைக்காமல் புதிய தேர்தல்களை வைக்க முடியாது என்பது அரசியல் சட்டம் கூறும் நியாயம்.

அதை 'கலைக்கும்' அதிகாரம், எங்கே என்று தெரியாமல் இன்னமும் மறைந்திருக்கும் திரு. வரதராஜப் பெருமாளுக்குதான் உண்டு; அவராக வந்து கலைத்தால் தான் உண்டு. அப்படி இல்லாவிட்டால் அரசு அதைக் கலைப்பதற்கான அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்க வேண் வேண்டும். இதற்கு பாராளுமன்றத்தில் இன்னொரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

இப்போது திரும்பவும் இன்னொரு பிரச்சினை எழுகிறது. ஏற்கனவே அதிகாரங்கள் குறைந்ததாக கருதப்படும் மாகாண சபைக்கு 'தற்செயலாக' வந்துவிட்ட இந்த நிலமையைக் காரணம் காட்டி மேலும் அதிகாரத்தை குறைப்பதை அனுமதிக்கலாமா? இதற்கு எதிர்க்கட்சிகள் சம்மதிக்குமா என்பதே இப்புதிய பிரச்சினை.

> எதிர்க்கட்சிகள் சம்மதிக்குமானால் ஆளும் கட்சியும் அரசும் சர்வ வல்லமை பெற்றதாக இருக்கும் நிலையே தோன்றும். இந்திய சட்ட சபைகளில் இதற்கு நிறைய உதாரணங்கள் உண்டு. இது யூ. என். பி. யோ, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியோ இரண்டுக்குமே அவையவை எதிர்க்கட்சிகளாக இருக்கப்போகும் காலங்களில் மிகவும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.


ஆனால் அரசு, சட்டத்திருத்தம் கொண்டுவரத் தயாராக இருப்பதாக புலிகளுக்கு அறிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்குமா என்பதே இன்றைய பிரச்சனை

இதற்கு ஒரு சுமுகமான தீர்வு காண முடியுமென்று அறிவித்திருக்கிறார் ஈரோஸ் பாலகுமார்.

ஈ. பி. ஆர். எல். எப். தானாகவே முன் வந்து மாகாண சபையை கலைத்துவிட வேண்டுமென்பது தான் அது.

சட்டபூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட தமக்கு பாதுகாப்பு வழங்க மறுத்ததும் அல்லாமல், தம்மை நாட்டை விட்டு ஓடும்படியும் சொன்ன



போரா? சமாதானமா?

அரசு சிக்கலில் மாட்டப்படுவதை உள்ளூர ஈ. பி. ஆர் எல். எப். விரும்பக்கூடும். 'தானாகவே கலைக்க வேண்டிய அவசியம் இல்லை, அது ஏற்கனவே கலைந்து விட்டது. இப்போது இருப்பது மாகாண சபை அல்ல, நான் முதல்வரும் அல்ல. இது தேசிய நிர்ணய சபை' என பத்திரிகையாளரிடம் இறுதியாக வரதராஜப் பெருமாள் கூறியிருந்தார். எனவே இப்போதும் கூட, தாமே கலைப்பதில் அவர் அக்கறை காட்டுவார் என நம்பமுடியவில்லை.

ஆக, இந்த இடியப்பச் சிக்கலை எப்படி அவிழ்க்கப் போகிறது அரசு?

சிலவேளைகளில் 6வது திருத்தச்சட்ட நீக்கமும் சரி, மாகாண சபைக் கலைப்புக்கான அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்குவதும் சரி வெற்றி பெறக்கூடும்.

ஆனால் அதுவே அதுமட்டுமே நாட்டில் அமைதிக்கும் சமாதானத்திற்குமான முடிவாகிவிடப் போவதில்லை; ஒருபோதும்!

> ஏனென்றால், இவை ஒவ்வொரு இனத்தினதும் தனித்துவமும் உரிமைகளும் மதிக்கப்படுதலோடு சம்பந்தப்பட்டவை;
>
> எந்தவொரு இனத்திற்கும் சிறப்புரிமைகள் வழங்கப்படுதலை நிறுத்துவதோடு சம்பந்தப்பட்டவை;
>
> எந்த ஒரு இனத்தினதும் மேலாட்சிக்கும் அரசியல், மொழி, மதம், பண்பாடு போன்ற அனைத்துத் துறையிலுமான மேலாட்சிக்கும் முடிவு கட்டுவதோடு சம்பந்தப்பட்டவை:
>
> மக்களின் அரசியல், பேச்சு, எழுத்து உரிமைகளை மதிப்பதோடு சம்பந்தப்பட்டவை;
>
> இவை அனைத்தையும் கணக்கிலெடுக்காதவரை எந்தத் தீர்வையும் தற்காலிகமாக கூட அரசால் வெற்றிகரமாக சாதித்துவிட முடியுமா என்பது சந்தேகமே.
>
> கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போம்

நன்றி - நூலகத்திட்டம்



# அமைச்சர் ரஞ்சன், பத்திரிகை சுதந்திரம், வெலிக்கடை மற்றும் 'தி ஐலண்ட்'

## சர்வதேசப் பயங்கரவாதிகள்!

சர்வதேச மன்னிப்புச் சபையில் சர்வதேச பயங்கரவாதிகளும் உள்ளனர். நான் அந்த அமைப்பிடம் மண்டியிடப் போவதில்லை. எந்தவொரு அமைப்புக்கும் நான் பயப்பட மாட்டேன்.


சர்வதேச மன்னிப்பு சபையின் கடிதங்களை நான் வாசிப்பதே இல்லை. அதிலுள்ள மேல் நாட்டு வெள்ளையர்கள் என்ன கடவுளின் வாரிசுகளா? சர்வதேச மன்னிப்புச் சபையின் கடிதங்கள் எனது மகனுக்கு முத்திரை சேகரிக்கவே உதவுகின்றன-

பாராளுமன்றத்தில் அமைச்சர் ரஞ்சன்

இந்த மாதத்தின் முக்கியமான சம்பவங்களிலொன்று கொழும்புப் பத்திரிகையாளர்களைச் சீண்டி விட்டுள்ளது. துணைப் பாதுகாப்பு அமைச்சரும் பெருந் தோட்டத்துறை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தினா அவர்கள் தமது வழமையான பத்திரிகையாளர் சந்திப்பின் போது வடக்கு கிழக்கு நிலைமைகள் பற்றியும் விடுதலைப் புலிகள் பற்றியும் தொடர்ந்து கேட்கப்பட்ட கேள்விகளால் சினமுற்று பத்திரிகையாளர்களை வெலிக்கடைச் சிறைச் சாலையில் தள்ளி விடப் போவதாகப் பூச்சாண்டி காட்டியுள்ளார். (நல்ல காலம் 'ரயரை'த் தூக்கிக் காட்டவில்லை;)

இது குறித்து 'தி ஐலண்ட்' பத்திரிகை முதல் பக்க ஆசிரியர் தலையங்கம் எழுதிற்று. சண்டே ரைம்ஸ் பத்திரிகையும் மெல்லிய தொனியில் ஒரு கண்டனம் எழுதிற்று. பிரச்சனை ஐலண்ட் பத்திரிகைச் செய்தி தொடர்பாகவே ஏற்பட்டதால் ஐலண்ட் பத்திரிகையும் சீற்றமுற நியாயமுண்டு. எனினும் பத்திரிகைச் சுதந்திரம், பத்திரிகையாளர்களின் பொறுப்புணர்வு, பற்றியெல்லாம் எழுதித் தீர்ப்பதற்கு ஐலண்ட் பத்திரிகைக்கு மட்டுமல்ல கொழும்பின் எந்தப் பத்திரிகைக்காவது தார்மிக நியாயமும் வலுவும் இருகிறதா என்பதே எம்முடைய அடிப்படை கேள்வி.

திரு. ரஞ்சன் விஜேரத்தினா பத்திரிகையாளர்களையும் பத்திரிகைகளையும் (மி) மதிக்கும் வகை குறித்து எமக்கும் கோபமும் ஆத்திரமும் உண்டுதான் வெலிக்கடைச் சிறையில் பத்



திரிகையாளர்களைத் தள்ளி விடுவதாக அவர் பயங் காட்டியது மிகப் பாரதூரமானது. ஏனென்றால் வெலிக்கடைச் சிறையில் ஜுலை மாதம் 83 ஆம் ஆண்டு என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். கொழும்புப் பத்திரிகையாளர்களுக்கும் அது தெரியும் (83 இல் அதனை எழுதுகிற வலுவும், சுதந்திரமும் அவர்களுக்கு இருக்கவில்லை) ஆனால் இப்போது அவர்களுக்குப்பயம் வருகிறது.

ஐலண்ட் பத்திரிகை, ரஞ்சன் விஜேரத்தினா, பத்திரிகைகள் மற்றும் வெலிக்கடை, என்ற தலைப்பில் எழுதியுள்ள ஆசிரியர் தலையங்கம் காரமானதும் தேவையானதும் தான் பிரச்சனை எங்கு வருகிறதென்றால் அவர்கள் 'தேசியப் பத்திரிகைகள் குடிமகன் பெரேரேவுக்கும் புஞ்சி சிங்ஹோவிற்கும் உண்மைகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறது' என்று எழுதும் போது தான் (குடிமகன் பெரேரோ கிறித்தவர்களதும் புஞ்சி சிங்ஹோ சிங்களபௌத்தர்களதும் குறியீடு! பார்க்கவும் ஐலண்ட்.)

சரி ஐயா! குடிமகன் பெரேரோவும் புஞ்சி சிங்ஹோவும் தான் இலங்கை மக்களின் குறியீட்டுப் பிரதிநிதிகள் என்றால் அப்துல் காதரும் அண்ணாமலையும், அரச ரத்தினமும் இலங்கை மக்களின் குறியீட்டுப் பிரதிநிதிகள் இல்லையா?

ஒருவேளை அவர்களைத் தமிழ் ஈழத்தின் பிரஜைகள் என்று நீங்கள் கருதுகிறீர்களோ என்னவோ? கடந்த பல வருடங்களாக வடக்குக் கிழக்கு மக்கள் மீது அரச ராணுவப் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டபோது நீங்கள் வக்காலத்து வாங்கவில்லையா? யாழ்ப்பாணத்திலிருந்து சற்ரர்டே றிவியூ என்ற பத்திரிகை வந்து கொண்டிருந்ததே அதனை இலங்கை அரசாங்கம் தடை செய்த போது அதன் அச்சகங்கள் மீது குண்டு வீசப்பட்ட போது ஒரு வரி கண்டனம் எழுதினீர்களா?

எத்தனை பத்திரிகையாளர்கள் வடக்குக் கிழக்கில் கொல்லப்பட்டு காணாமல் போய் சிறையிலடைக்கப்பட்டு இருந்தார்களே ஒரு வரி, ஒரு சொல்.

இந்திய ராணுவம் முன்னைய ஈழமுரசு பத்திரிகை ஆசிரியரும் யாழ்ப்பாணத்தின் மூத்த பத்திரிகையாளருமான திரு. எஸ்.எம். கோபாலரத்தினத்தை மாதக் கணக்காக சிறையில் அடைத்து வைத்துத் துன்புறுத்தியதே உங்களுக்கு தெரியுமா?


இன்று திரு. ரஞ்சன் விஜேரத்தினா வெலிக்கடை என்று பயங்காட்டியதுடன் ஆடிப் போயிற்றே உங்களுடைய 'துணிவும்' 'சுதந்திரமும்'

வடக்குக் கிழக்கைப் பற்றியும் விடுதலைப் புலிகள் பற்றியும் 'சுற்றிச் சுற்றிச் விடுத்து விடுத்து'க் கேள்வி கேட்பதும் கிளறுவதும் இலங்கைக்குச் சமாதானத்தைக் கொண்டு வரவோ அல்லது தமிழ் முஸ்லிம் மலையக மக்களின் நன்மை குறித்தோ அல்ல என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும்.



எங்கே சிறுபான்மை மக்களுக்கு எல்லாவற்றையும் கொடுத்து விடப் போகிறார்களோ என்ற பேரினவாத அச்சம் தவிர வேறொன்றும் அல்ல உங்களைத் தூண்டுவது மற்றப்படி ஐலண்டோ, ஏனைய பத்திரிகைகளோ எப்போதாவது இருந்து விட்டுப் பேசும் பல்லின பல்மத (Multiethnic, multi-relegous) நாடு என்பது ஜனநாயகத்துக்கு வாய்ச் சேவை மட்டுமே செய்வதாகும்.

இதனைத் தான் திரு. ரஞ்சன் விஜேரத்தினா திரு. பிரேமதாசா மற்றும் பலர் செய்கிறார்கள். அவர்கள் சொல்வது 'ஜனநாயகம்' நீங்கள் சொல்வதும் அதுதானோ?
கும்பலிலே கோவிந்தா;
திருவிழாவில் கடலை;
பாராளுமன்றத்துக்குப் பஜேரோ! கொழும்புப் பத்திரிகைகளுக்குப் புண்ணாக்கு!
வேறென்ன சொல்ல?







இல. 6, அலோ சாலை, மேர்ஜ் நார்பிலி ட.பாலகிருஷ்ணனால் லிட்டில் ஸ்டார் அச்சகத்தில் வெளியிடப் பெற்றது.